செய்தித் தாளாகப் பதிவுபெற்றது

வெள்ளிக்கிழமை தோறும் வெளிவருவது

உ

சிவமயம்

# இந்துசாதனம்

சைவ பரிபாலன சபை வெளியீடு.

பிரதி விலை: சதம் 20

ஆரம்பம்: விரோதி ஞூ (1889) ஆவணிமீ 28-ம் உ  அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450. காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.  தொலைபேசி: 356

புத்-அஎ]  யாழ்ப்பாணம்:- இராக்ஷத ஞூ ஆவணி மீ கச-உ வெள்ளிக்கிழமை (29-8-1975) [இல: உக

# நானிலம் நலமே வாழ நயந்தருள்வாய் நல்லைக் கந்தா!

## என்று இதயங்குமுற நல்லூரில் இறைஞ்சுகின்றனர் அடியார்கள்

### கார்த்திகைத் திருவிழா - கண்கொளாக் காட்சி

கார்த்திகேயனை வாயாரப் பாடிப் பாடி ஆடி ஆடி மகிழ்கின்ற பத்தர் குழாங்களை நல்லூர்த் திருவீதியிற் காணும் காட்சியே காட்சி. முருகா! முருகா! கந்தா! கடம்பா! கலியுகவரதா! என்று முழங்கும் முழக்கமே முழக்கம்! 'வேலும் - மயிலும்' என்று நாலுபக்கமும் கேட்கும் அருள் ஒலியே ஒலி!

"நல்லூரான் திருவடியை நான் நினைத்த மாத்திரத்தே எல்லாம் மறப்பேனடி, கிளியே! இரவு பகல் காணேனடி" என்ற சிவயோகச் செம்மலின் குரல் ஒலித்தவண்ணமிருக்கிறது!

### காத்திடுவாய்!

"இறை — ஒளி"

நானிலம் வாழ நயந்தருள் நல்லையில்
வேனலம் மிக்கு விளங்கநிற்கும் — ஞானமே!
காலம் கலிநீங்கக் காத்திடுவாய் கந்தனே!
சீலம் திகழவைப்பாய் சீர்.



திருச்சிற்றம்பலம்.
நாளென்செயும் வினைதானெனன்
செயுமெனை நாடிவந்த
கோளென் செயுங்கொடுங்
கூற்றென் செயுங்குமரேசரிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந்
தண்டையுஞ் சண்முகமுந்
தோளுங் கடம்பு மெனக்குமுன்
னேவந்து தோன்றிடினே.
திருச்சிற்றம்பலம்.
— கந்தரலங்காரம்.

### கும்பாபிடேகம்

கட்டுவன் ஸ்ரீ மூத்துமாரி அம்பாள் ஆலய புனராவர்த்தன சம்புரோக்ஷண அஷ்ட பந்தன மகா கும்பாபிஷேகம் ஆவணித் திங்கள் 25-ம் நாள் [10-9-75] புதன்கிழமை காலை 6-36 மணி முதல் 8-22 மணி வரையில் வரும் சுபவேளையில் நடைபெறும்,

கும்பாபிஷேக வைபவங்கள் 'கிரியா வித்தகர்' சிவத்திரு. க. சிவபாதசுந்தரக் குருக்கள் அவர்கள் தலைமையில் நிகழும். சிவத்திரு. வ. வே. நவரத்தினக்குருக்கள் சோ. பாலசுந்தரக் குருக்கள் ச, ஆறுமுகக் குருக்கள் முதலியவர்கள் இந் நிகழ்ச்சிகளுக்குத் துணை புரிவார்கள். 6-9-75 சனிக்கிழமை காலை கிரியைகளாரம்பமாகும். (க, ரி)

### பாத யாத்திரை

—0—

ஏழாலை வைரவர் கோவிலிலிருந்து பஜனைப்பாதயாத்திரை அடியார்கள் நல்லூர் தேர்த் திருவிழாவில் கலந்து கொள்ளும்பொருட்டு 4-9-75 அதிகாலை நல்லை வந்து சேரவுள்ளனர். இக் குழுவுக்கு 'ஆத்ம ஜோதி' ஆசிரியர் திரு. நா. முத்தையா அவர்கள் தலைமை தாங்குவர். பல பசனைச் சபைகள் இதிற் சேரும்.

## பாலர் கலை விழாக்கள் கல்விப் பயிற்சிக்குப் பயனாகும்

மாணவர் கல்வியை வளர்ப்பதற்கு எடுக்கும் முக்கிய நடவடிக்கைகளில் பாலர் கலை விழாக்கள் முக்கிய இடம் வகிக்கின்றன. இவ் விழாக்கள் மூலம் மாணவர்கள் உளவளர்ச்சி விரிவடைகிறது. மாணவர்களது கல்வி வளர்ச்சியில் மிகவும் அக்கறை காட்டி வரும் உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாலயம் கல்வித் துறையில் மேலும் மேலும் முன்னேற வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாலய கலைவிழாவிற் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய வைத்திய நிபுணர் திரு. பொ. குலேந்திரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வித்தியாலய அதிபர் திரு. வி. அரியநாயகம் தமது தலைமையுரையில் கல்வித் துறையில் முன்னேற்றம் கண்டு வரும் இக் காலத்தில் மாணவர்கள் கல்வி வளர்ச்சிக்குப் பெற்றோர்களது ஒத்துழைப்பு மிகவும் அவசியம். பெற்றோர்கள் தமது பிள்ளைகளது கல்வி விஷயத்தில் கண்ணும் கருத்துமாய் இருக்க வேண்டும் என்றார்.

கோப்பாய் வட்டாரக்கல்வி அதிகாரி திரு. வ. க. ஈசுரபாதம் பொருட்காட்சியைத் திறந்து வைத்துப் பேசுகையில் 'ஒன்றிணைந்த பாடத் திட்டத்தின் மூலம் கல்வித்

[வளர்ச்சி 2-ம் பக்கம்]

### பீடாரோகணவிழா

ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளது பீடாரோகண ௫-ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் நிகழ்கின்றது.

### வெளியீட்டு விழா

நல்லைக் கந்தன் தேர்த் திருவிழா அன்று பிற்பகல் 5 மணியளவில் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் திருமுறைப் பண்ணிசைக் கலாநிதி எஸ். கே. சிவபாலன் அவர்களால் தொகுத்தெழுதிப்பெற்ற 'பயன் தரும் பண்ணிசைப் பதிகங்கள்' எனும் நூலை ஸ்ரீலஸ்ரீ பரமாசார்ய சுவாமிகள் வெளியிட்டு வைப்பார்கள். க. கி.

## சமயப் பரீட்சைக்குச் சபை நிலையம்

சைவ பரிபாலன சபையின் பரீட்சைக் காரியாலயம் 450 கே. கே. எஸ் வீதியிலுள்ள கட்டிடத்தில் கடந்த புதன்கிழமை சபைத் தலைவர் த. சோமசுந்தரம் அவர்களால் குத்துவிளக்கேற்றித் திறந்து வைக்கப்பெற்றது,

இவ் வைபவத்தில் பரீட்சைக் காரியதரிசி சி. சிவரத்தினம் பேசுகையில் கூறியதாவது:—

"சமய அறிவுத் தேர்வுகளை நடாத்தி, திறமைசாலிகளுக்குப் பரிசில்கள் வழங்குவதும் சமய நூல்களை அச்சிட்டு வெளியிட வேண்டுமென்பதும் சைவ பரிபாலனசபையின் ஆரம்ப விதிகளாக அமைந்துள்ளன.

1888-ம் ஆண்டு இச்சபை நாவலர் நெறியில் தோற்றிய பழம் பெருமை வாய்ந்தது என்றால் மிகையாகாது. மாணவர் சமய அறிவுத் தேர்ச்சி, திருமுறைப்போட்டி சமய உயர்தரப் பரீட்சை ஆதியன நடாத்தி வருவது போற்றற்குரியதாகும்' இவ் வைபவத்திற்கு சைவாபிமானிகள் பலர் சமூகமளித்தனர். சிற்றுண்டியும் வழங்கப்பெற்றது.

## சைவ மாநாடு - 1975

சைவ பரிபாலன சபையார் ஆண்டுதோறும் நடாத்தி வரும் அகில இலங்கைச் சைவ மாநாடு எதிர்பாராத சில காரணங்களினால் முன்னர் அறிவித்தபடி குறித்த திகதிகளில் நடைபெறமாட்டாது என்பதை சைவ பரிபாலன சபை உறுப்பினர்கட்கும், சைவாபிமானிகளுக்கும் மிக்க வருத்தத்துடன் அறியத் தருகின்றோம்.

சைவ பரிபாலன சபை,
யாழ்ப்பாணம், 27-8-75.

வை. இரகுநாதமுதலியார்
கௌரவ செயலாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்க தண்புனல்
வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர்தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

இராக்ஷத ஹூ ஆவணி மீ ௭-௨ வெள்ளி

## பண்ணியல்பாகப் பத்திமையாற் பாடிப்பணிதல்

பெருந் திருவிழாக் காலங்களிலே திருமுறை ஓதும் செம்மை எல்லாக் கோயில்களிலும் எழுங்காலம் என்றுகுமோ என இறைவனை எண்ணி இறைஞ்சுகின்றனர் மெய்யடியார்கள். என்னை! மாறி வருங் காலமாம் இன்று வேறு நிகழ்ச்சிகளும் ஆலயங்களிலே இடம்பெறுகின்றன— விபரீதக் கொள்கைகளும் விளங்குகின்றன. ஒழுங்கு எது — ஒழுங்கீனம் எது என்ற பாகுபாடில்லாத நிலைமையும் உண்டாகின்றது. ஆகாயால் எங்க.

சைவ சித்தாந்தத் தெய்வ மரபில் ஒழுகி வருபவர்கள் திருமுறை ஓதுதலையும் ஓதுவித்தலையும் ஓதக் கேட்டலையும் சமயக் கடமையாக எண்ணி அவ்வாறமைந்து வாழ்வதைக் காண்கின்றவர்கள் அம்முறையே செம்மையானதென்பதையறிந்து தாமும் அதுவிதம் பின்பற்ற முடியாமைமையைப் பார்த்து மனம் வருந்துகின்றோம்.

திருக்கோயில்கள் 'திரு' என்ற செம்மைக்குரிய நிலையங்கள் புனிதமே குறிக்கோள் புனிதனைப் போற்றித் தொழுவதே சால்பு. புலன்களைப் புறநிகழ்ச்சிகளிற் புகவிடாது பொருளானவற்றில் மருவச் செய்வதே நியமம். எனவே ஆலயங்களிலே அந்தணர்களும் அடியவர்களும் அருச்சனை செய்பவர்களும் செம்மை நெறியில் நின்றொழுகுவதை வழுவாது கடைப் பிடித்தல் வேண்டும். இதற்கு இயைந்த வழி திருமுறை வழிபாடேயாகும்.

நால்வர்களும் நாயன்மார்களும் நன்றென நின்ற நெறியில் அவர்தம் அடியவர்கள் நாங்கள் என்று கூறிக்கொள்ளும் சைவமக்கள் திருக்கோயில்களிலே திருமுறை ஓதும் திவ்விய ஒழுங்கைச் செவ்வனே செய்யாதிருப்பது பெருந் தவறு. வேதம் ஓதுதலின்பின் திருமுறை ஓதுதலும் மங்கல ஒலி இசைப்பதுவும் இறைவன் புகழ் எடுத்துரைக்கும் சமயச் சொற்பெருக்குதலும் இன்றி ஏனைய நிகழ்ச்சிகள் ஆலயங்களிலே அமையக்கூடாவென்ற அருங்கருத்தை அந்நாளிலே நாவலர் பெருமான் நாவன்மையுற எடுத்துரைத்தார். மறுத்தவர்களுடன் சொற்போர் தொடுத்தார் நெறியல்லா நெறியில் நிற்காதீர் என்று பலகாலும் வற்புறுத்தி வந்தார்.

திருக்கோயிலில் வழிபடுகின்றவர்கள் செவிகளிலே 'சிவ சிவ' என்ற செஞ் சொற்கள் ஓயாது மேவ வைப்பதற்குத் திருமுறை ஓதுவித்தலே ஒரு வழி. ஓதுவார் மூர்த்திகள் என்று திருக்கோயில்களிலே உரிய இடம் பெற்றிருக்கின்ற உண்மையடியார்கள் சைவம் வளர்க்கும் தொண்டர்கள் அவர்களை நாம் பயன்படுத்திக்கொண்டால் ஆலயங்களிலே எவ்வித கேலிக்கிடமான நிகழ்ச்சிகளும் நிகழமாட்டா,

பண்டிதமணி கணபதிப்பிள்ளையவர்கள் பணையைப்பற்றி 'இந்துசாதன'த்தில் எழுதிய விழுமிய கருத்தமைந்த ஆராய்ச்சிக் கட்டுரையைச் சைவமக்கள் நனகு படித்தறிவார்களேயானல் ஆலயங்களிலே திருமுறை ஓதுவிக்கும் நெறியின் சால்பைப் புரிந்து கொள்ளுவர். புரிந்து அந்நெறி எங்கும் பரவிவரச் செயலாற்றுவார்கள். சிவநெறி வளர இது உதவும்

## நல்லைக் கந்தன் விசேட திருவிழாக்கள்

நல்லூர்க் கந்தசுவாமிகோவில் விசேட திருவிழாக்களில் தெண்டாயுத பாணித் திருவிழா மாலை 4-30 மணிக்கும் தீர்த்தவிழா மாலை 4 மணிக்கும் பூங்கவேனம் இரவு 6 மணிக்கும் நிகழும் தேர் விழா காலை 8 மணி. ஏனைய விழாக்கள் தினமும் இரவு 8 மணிக்கு நிகழும்.

| | | | |
|---|---|---|---|
| ஆவணி | 13 | (29-8-75) | வெள்ளி கார்த்திகைத் திருவிழா |
| ,, | 15 | (31-8-75) | ஞாயிறு கைலாச வாகனத் திருவிழா |
| ,, | 17 | (2-9-75) | செவ்வாய் தண்டாயுதபாணித்திருவிழா |
| ,, | 18 | (3-9-75) | புதன் சப்பரத் திருவிழா |
| ,, | 19 | (4-9-75) | வியாழன் தேர்த் திருவிழா |
| ,, | 20 | (5-9-75) | வெள்ளி தீர்த்தத் திருவிழா |
| ,, | 21 | (6-9-75) | சனிக்கிழமை பூங்காவனத் திருவிழா |

## பாலர் கலைவிழா

1- ஆம் பக்கத்து வளர்ச்சி துறையில் புரட்சிகரமான நல்ல மாற்றங்களைச் செய்து முன்னேற்றங்காண வித்தியா பகுதி விரும்பி வேண்டிய பணிகளைச்செய்து வருகிறது. மாணவர்கள் சுமார் ஐந்து ஆறு மணித்தியாலங்கள் தான் ஆசிரியர்கள் மேற் பார்வையில் இருந்து வருகிறார்கள். ஏனைய நேரமெல்லாம் பெற்றோர்கள் பாது காப்பிலேயே இருக்கிறார்கள். ஆகவே பிள்ளைகளது வளர்ச்சி முழுவதும் ஆசிரியர்களிலேயே என்று சுமத்திவிடக்கூடாது பிள்ளைகள் கல்விவளர்ச்சிக்கு பெற்றோர்களது பொறுப்பும் கடமையும் முக்கியமானது என்றார்.

பிரதி அதிபர் திரு. அ பஞ்சாட்சரம் அவைவரையும் வரவேற்றுப் பேசுகையில் 'உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாலயம் தாபித்து இந்த ஆண்டில் அறுபதாண்டுகள் பூர்த்தியடைகின்றன. இப் பாடசாலைமூலம் மக்கள் பெற்ற பயன்களோ மிகமிக அதிகம். இப்பயன்களையெல்லாம் ஞாபகம் செய்யும் முகமாக வைர விழாவொன்றினைக் கொண்டாட எண்ணியுள்ளோம். பாடசாலையின் சரித்திரத்தில் வைர விழா முக்கிய இடம் பெறுகின்றது. வைர விழாவின் வெள்ளோட்ட விழாவே இக்கலை விழாவாகும் என்றார்.

ஆசிரியர் திரு. செ. சின்னத்தம்பியின் நன்றியுரையையடுத்துப் பாலர் கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

## நல்லவையே எண்ணல் வேண்டும்



பக்தர்: "வள்ளல் இராமநாதன் துரையின் நினைவு முத்திரை வெளியீட்டு நிகழ்ச்சியைத் தேசியத் திருவிழாவாகக்கொண்டாட வேண்டும் என்றும், இந்நிகழ்ச்சியை இன, மத, கட்சி பேதமின்றி — சர்வ கட்சிகளும் கலந்துகொள்ளும் வைபவமாக அமையச் செய்து, அந் நிகழ்ச்சியைத் திரைப்படமாக்கி நாடெங்கணும் காண்பிக்க நமது தகவற் பகுதியினர் முன்வர வேண்டுமென ஒரு எழுச்சிக்குரல் இப்ப கிளம்பியிருக்குது! ஆகுமாஇது?

சித்தர்: ஆகாமல் என்ன? நமது கடமை அது. "ஒப்பற்ற தலைவர் என நாடு போற்றும் வள்ளலின் பெருமையை இளந் தலைமுறை புரிந்துகொள்ள இது மட்டுமா! இன்னமும் எவ்வளவோ செய்யலாமே! 'முத்திரை வெளியிடுக' என்றகுரல் எத்தனை ஆண்டுகள் இங்கு ஒலித்தன? பாரதியார் அன்னை பராசக்தியை வேண்டினார்! எப்படி ......?

"எண்ணிய முடிதல்வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்தநல் அறிவுவேண்டும்'

நமது தலைவர்களும் சமூகத் தொண்டர்களும் இந்தப் பெரு [illegible] பாரதியார் கனவு கண்டிருப்பரா?

— 'நாயன்மார் - நாதன்',

## புலவன் புகழ் தமிழரிடை துலங்கி வாழும்

[ இராமநாதன் கல்லூரியில் 31-8-1975 பிற்பகல் 5 மணிக்கு சுவாமி ஞானப்பிரகாசர், புலவர் குமாரசாமிப்பிள்ளை ஆகியோரின் ஞாபகார்த்தமாக சுன்னுகம் பட்டின சபையால் நடத்தப்பெறவிருக்கும் தமிழ்விழாச் சார்பாக, சுன்னுகம் அ. குமாரசுவாமிப் புலவரவர்கள்மீது சென்னையரசாங்க ஆஸ்தான கவிஞர் நாமக்கல்: வே. இராமலிங்கம்பிள்ளையவர்கள் (1930 இல்) இயற்றிய பாராட்டுக் கவிகள் மறுபிரசுரம் செய்யப்பெறுகின்றன. ]

திரைகண்ட மொழிகளிலே தலைசிறந்த மொழியாகுந்
தமிழின் வேலைக்
கரைகண்ட பேரறிஞன் கடியநடை நூல்களுக்கு
எளிமையான
உரைகண்ட ஆசிரியன் உபதேசஞ் செய்வதிலும்
உயர்ந்த ஆசான்
நரைகண்ட முதுபுலவன் சுன்னுகக் குமாரசாமி
நாமம் வாழ்க. (1)

தென்மொழிக்குத் துணையாகும் தெய்வவட
மொழியதிலுந் தேர்ச்சி மிக்கோன்
நன்மொழியாம் உலகெங்கும் நடமாடும்
ஆங்கிலமும் அதுபோன்றுள்ள
பன்மொழியும் பலர்பயில வேண்டுமென்ற
பரந்த மனப்பான்மையினன்
இன்மொழியாய் எவ்வெவர்க்கும் இதமுரைக்கும்
இயல்புடையான் குமாரசுவாமி. (2)

அன்புடையான் பண்புடையான் ஆற்றல் மிக்கான்
ஆராய்ச்சி புரிவதிலே அயரா நெஞ்சன்
முன்பறியாப் புதுமுறையில் முனைந் தாராய்ந்து
முத்தமிழின் மெய்ச்சிறப்பை முழுதுங் கண்டான்
மன்பதைகள் தமிழினிப்பை மாந்தும் வண்ணம்
மணம்வீசும் பலநூல்கள் மலரச் செய்தான்
துன்பறியா உழைப்பாளன் குமாரசாமிப்
புலவன்புகழ் தமிழரிடை துலங்கி வாழும். (3)

உ

## சைவ பரிபாலன சபை

### உறுப்பினர்கட்கு ஓர் அறிவித்தல்.

சைவபரிபாலன சபையின் சாதாரண அங்கத்தவர் ஆண்டுச் சந்தா ஐந்து ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளது.

1975 மார்கழி வரை உள்ள சந்தாப் பணம் 30-9-75 க்கு முன்னர் செலுத்தப்பட வேண்டும்.

'இந்துசாதனம்' "Hindu Organ' பிரசுரங்கள் சபை உறுப்பினர்கட்குச் 15-8-75 இதழுக்குப் பின்னர் இலவசமாக அனுப்பப்படமாட்டாது. சபை உறுப்பினர்கள் விரும்பின் சந்தா செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

31-7-75 க்கு முன்னர் 1975-ம் ஆண்டிற்குரிய அங்கத்தவர் சந்தாவை செலுத்தியவர்கள் தங்களது மேலதிகச் சந்தா கொடுப்பனவு சம்பந்தமாக என்னுடன் தொடர்புகொண்டு:

1. மேற்படி பிரசுரங்களைத் தொடர்ந்து பெறலாம் அல்லது
2. சபையின் விதிகளுக்கமைய மேல்வரும் ஆண்டுகளுக்குச் சந்தாவை நீடித்துக் கொள்ளலாம்.

சபை உறுப்பினர்களை இவ் அறிவித்தலைக் கவனித்து ஆவன செய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

சைவபரிபாலன சபை, வை. இரகுநாதமுதலியார்,
யாழ்ப்பாணம், 9-7-75. கௌரவ காரியதரிசி.

உ

யாழ்ப்பாணம் — சைவ பரிபாலன சபை
நடாத்தும்

## சித்தாந்தத் தேர்வுகள் 1975.

வழமைபோல எதிர்வரும் டிசம்பர் 26, 27, 28-ஆம் திகதிகளில் சித்தாந்தத் தேர்வுகள் நடைபெறும்.

விண்ணப்பிக்கும் இறுதி நாள்: 31—8—75.

விண்ணப்பப் பத்திரம் தேவையானோர் நேரிலோ அல்லது எழுத்து மூலமோ பெற்றுக் கொள்ளலாம்.

முகவரி:— 450, காங்கேசன்துறைவீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வேட்டைத் திருவிழா

பொன்னாலை ஸ்ரீவரதராசப் பெருமாள் ஆலய 16 ஆம் நாள் வேட்டைத் திருவிழா 29-8-75 ஆகும், பகல் விசேட அபிடேகமும், ஆராதனைகளும் இரவு திருவிழாவும் இடம்பெறும். இவ் விழாவில் தொல்புரம் மத்திய ச. ச. நிலையத்தினரது புராண நாடகமும் இடம்பெறும்.

## பூர்த்தி விழா

யாழ் உண்ணாட்டு இறைவரி அலுவலகத்(வருமானவரி)தைச் சேர்ந்த வரி உத்தியோகத்தர்கள் தமது புதியசேவை ஓராண்டு பூர்த்தியை பிரதி ஆணையாளர் திரு. கே தங்கராசா அவர்கள் தலைமையில் கொண்டாடினர். வரி உத்தியோகத்தர்களும் பெருந்தரப் பணிப்பாளர்களும் சேவைகள்பற்றி கலந்துரையாடினர். தேனீர் விருந்தும் நிகழ்ந்தது

## [ நேயர் நெஞ்சம் ]

## ஒரு விண்ணப்பம்

அகில இலங்கைக் காந்தி சேவா சங்கம் மகாத்மா காந்தி ஞாபகார்த்தமாக எழுந்த தாபனங்கள் பற்றிய ஒரு விபரப் பட்டியலைத் தயாரித்து வருகிறது. மகாத்மா காந்தி இலங்கை வந்தபோது அவரால் திறந்து வைக்கப் பெற்ற தாபனங்களைச் சார்ந்தோர் விபரங்கள் தந்தால் நல்லது. இன்னும் அவர் பெயரால் நிறுவப்பெற்ற மண்டபங்கள், வீதிகள், நந்தவனங்கள் எங்கு உள்ளனவென்றும் அவருடைய சிலைகள் இருப்பின் அவை யாரால் எப்போது நிறுவப்பெற்றன என்பதுபற்றியும் விபரங்களைத் தருமாறு தயவுடன் வேண்டுகிறோம்.

சோ. க தம்பிப்பிள்ளை,
½, 47 ஆவது ஒழுங்கை,
கொழு பு-6.

## சனசமூக நிலைய வெள்ளி விழா

—0—

தொல்புரம் மத்திய சனசமூக நிலைய வாசிகசாலையின் வெள்ளி விழா புரட்டாதி மாதக் கடைசியில் சிறப்பா கொண்டாடப்பட வுள்ளது. இவ்விழாச் சார்பில் பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி கலை. கலாசாரப் போட்டி, விளையாட்டுப் போட்டி, சமய அறிவுப் போட்டி என்பன நடாத்தப்பெறும். வெள்ளி விழா நிர்வாகக் குழுவினர் விபரம் வருமாறு:—

தலைவர் திரு. க, தர்மரத்தினம், தலைமை ஆசிரியர், செயலாளர் திரு. சி. நடராசா பொருளாளர் திரு. சி. வரதராசா. வெள்ளிவிழா மலர்க் குழுவினர்:—

திரு. க. தர்மரத்தினம் திரு. சி. வரதராசா (பத்திராதிபர்) திரு. க. ஞா. யோசெவ் திரு. நா. கிருஷ்ண சாமி, திரு. ப. விநாயகம்.

## அச்சுப் பிழைகள்

பொறுமை வேண்டும்!

அச்சுப் பிழைகளுக்காக வருந்தித் தவிக்கும் மனப்பான்மை மெல்ல மெல்ல மாறி அவற்றைச் சகித்துக்கொள்ளவும், பொறுத்துக்கொள்ளவும் மக்கள் ஓரளவுபழகிவிட்டார்கள். “இது ஒன்றும் பெரிய தப்பு இல்லை! இதைவிடப் பெரிய தப்பெல்லாம் வந்திருக்கு” என்று பிழைகளை ஏற்றுக்கொள்ளவும் ஜீரணிக்கவும் மக்கள் தயாராகிப் பழக்கப்பட்டு விட்டார்களோ என்றும் சந்தேகப்படுகின்றேன். அச்சகங்களில் புத்தகங்கள், பத்திரிகைகளைப் பிழையின்றி அச்சிட்டுக்கொடுக்க வேண்டும் என்கிற சிரத்தை மெல்ல மெல்லக் குறைந்துவிட்டது. எல்லா இடங்களிலும்தலைபோகிற அவசரம்! காலில் வெந்நீரை ஊற்றிக்கொண்டது போலப் பறக்கிறார்கள்! பொறுமையாயிருந்து புரூஃப் பார்க்கிற (ஒப்பு நோக்கல்) மனப்பான்மை, சுரெக்ஷன் (திருத்தம்) போடுகிற மனப்பான்மை எல்லாமே நாட்டில் படிப்படியாகப் போய் வருகின்றன. புரூஃப் பார்க்கும் போதே பிழையுள்ள வரிகள் திருடனைப்போல் குபீரென்று பார்வைக்குத் தப்பி விடும். இரண்டு மூன்று முறை படித்தாலொழியச் சில வரிகளிலுள்ள பிழைகள் கண்ணுக்குத்தெரியாது. தமிழ்நாட்டில் கா. ஸ்ரீ. ஸ்ரீ. புரூஃப் பார்ப்பதில் கெட்டிக்காரர் என்று சொல்லுவார்கள். பாடப் புத்தகங்களைப் புரூஃப் பார்ப்பதில் வித்வான் மே. வீ. வேணு கோபாலப்பிள்ளை சிறப்பான திறன் உள்ளவர் என்று சொல்லுவார்கள். சமூகத்தைத் திருத்துவதைவிட புரூஃப் [illegible] தென்று தோன்றுகிறது!

நன்றி - தீபம் ஆகஸ்ட் 1975.

## கோட்டுக் கொமிஷன் விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம் இல; 12531

வல்லிபுரக் கோவில் ரேட்டு புலோலி தெற்கு
(1) நாகலிங்கம மகேந்திரனும்
(2) பெண் கமலாம்பிகையும் — வழக்காளிகள்

எதிராக

வல்லிபுரக் கோயில் ரேட்டு. புலோலி தெற்கு,
(1) சரவணமுத்து குமாரசாமியும்
(2) பெண் செல்லம்மாவும் — எதிராளிகள்

மேற் குறித்த இலக்க வழக்கின் தீர்வைப்படியும் பிரித்த கோட்டால் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ் விபரிக்கப்படுமாதனங்களை 1975-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 27-ஆந் தேதி (27-9-75) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் குறித்த ஆதனங்களிடமாகவிருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### ஆதன விபரம்

(1) வடமாகாணம யாழ்ப்பாணம டிஸ்திறிக், வடமராட்சிப் பகுதி, கட்டைவேலிக கோயிற்பற்று வல்லிபுரக குறிச்சியிறை குணரத்தை நி, பர. 6, குளி 9½, வீடும். கிணறும் எல்லை கிழக்கு கணபதிப்பிள்ளை பெண் பாறுபதிப்பிள்ளைக்குடையவாதனம் வடக்கு ரேட்டு மேற்கு ஒழுங்கை. தெற்கு சிற்றம்பலம் சந்தையாவுக்குடையவாதனம். இவ்வெல்லைககுட்பட யாவிலும் சொரியலாய் அரைவாசி.

இக் கோட்டால் அனுமதிக்கப்பட்ட விலைமதிப்பு ரூபா. 6000/-

(2) ஷெ யிறை குணரத்தை நி. பர. 2½ எல்லை கிழக்கு கணபதிப்பிள்ளை வல்லிபுரத்துக்குடையவாதனம், வடக்கு ரேட்டு. செல்லையா கனகசபைக்குடைய வாதனம. தெற்கு;- செல்லையா கனகசபைக்கும் மறுபேருக்குடையவாதனம். இவ்வெல்லைக்குட்பட்டவை யாவும்.

இத்துக் கோட்டால் அனுமதிக்கப்பட்ட விலை மதிப்பு ரூ 5000/-

தீர்வைத்தொகை: — ரூபாய் 9858/- இன்னும ரூபாய் 6450/-க்கு 13-11-73 தொடக்கம் 3-6-74 வரையும் 8 வீத வட்டியும் இன்னும் முழுத்தொகைக்கும் 4-6-74 தொடக்கம் பணம் இறுககுமவரை நூற்றுக்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 247-85

கா. முத்துக்குமாரு ஐயர்
நீதிமன்ற ஆணையாளரும்
விலை மதிப்பாளரும்

“தங்கவேல் ஆலயம்”
“சந்நிதி வேல்”
பருத்தித்துறை. 27-8-75

76, 29-8-

## பிரிவிடுதல் நொத்தீஸ்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம் இல. 12967

அல்வாய் தெற்கு
சுப்பிரமணியம் கைம்பெண் புவனேஸ்வரி
மறுநாகம் செல்லம்மா வழக்ககளி

எதிராக

அல்வாய் தெற்கு
1. கதிரிப்பிள்ளை செல்லையா
2. பெண் செல்லம்மா
3. கார்த்திகேசு பொன்னையா
4. பெண் காமாட்சியம்மா
5. பொன்னையா இராசரத்தினம்
6, பொன்னையா செல்வராசா — எதிரிகள்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி கட்டைவேலிக் கோயிற்பற்று அல்வாய் மழவராய குறிச்சி இறை நவகணுவத்தை நீ பர. 9 ஷெ வீடு ¼ ஆனைப்பாகன் கலட்டி நி. பர 18 7/8. இவைகளில் மூன்றும் பிரிவாகிய ஆனைப்பாகன் கலட்டி நி, பர, 18, 7/8. இவைகளில மூன்றும் பிரிவாகிய ஆனைப்பாகன் கலட்டி நி. பர: 18, 7/8 என்னும ஆதனம 1951-ம் ஆண்டின் 16-ம் இலக்கப் பிரிவிடுதற் கட்டளைச் சட்டத்திற்கமைய மேற்படி கோட்டில் மேற்படி இலககத்தின் ஓர் பிரிவிடுதல் வழக்குத் தொடர்ந்திருக்கின்றதென்று இததாலுமக கறிவிக்கப்பட்டிருக்கின்றது.

மேற்படி வழக்கில் எதிரிகள் மேற்படி கோட்டில் சமுகமளிக்கும்படி கட்டளைபண்ணப்பட்டிருந்து ஷெ தொடர்ச்சியை 1975-ம் ஆண்டு புரட்டாதி மீ 23-ம் திகதி (23-9-75) க்கு முன்பதாக பிரசுரம் செய்யும்படி கட்டளையிடப்பட்டிருக்கிறது.

கோட்டாரின கட்டளைப்படி
க. கனகராசா
பதிவாளருக்காக.

1975 ம் ஆண்டு ஆடி மீ 30 உ

## பிரிவிடுதல் நொத்தீஸ்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்

இல. 12966

சமரபாகு:
வேலு கதிரிப்பிள்ளை கைம்பெண்
கதிராசிப்பிள்ளை வழக்காளி

எதிராக

சமரபாகு;
1 கந்தையா தம்பிப்பிள்ளை (2) தில்லையர் சிவகுரு ஷைம் முத்தாச்சி (3) சின்னத்தம்பி இராமலிங்கம் (4) இளையதம்பி சாதலிங்கம் (5) பெண் பாக்கியம் (6) இராமலிங்கம் சொர்ணலிங்கம் (7) மயிலு சிவரத்தினம் (8) மயிலு நாகரத்தினம் (9) தம்பையா தியாகராசா (10) பெண் சின்னம்மா (11) சண்முகம் முருகேசு (12) கந்தர் கனகசபை கைம்பெண் தங்கமுத்து 13) வேலுப்பிள்ளை முத்துக்குமாரு (14) பெண் பொன்னம்மா (15) சிதம்பரப்பிள்ளை மகள் பத்மாவதி (16) கந்தவனம் மனுநாயகம் ஷனகசபை சுப்பிரமணியம்,

எதிரிகள்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி உடுப்பிட்டிக் கோயிற்பற்று சமரபாகு தேவன் குறிச்சி இறை மரககாயன தோட்டம் நி, பர, 9 என்னும் ஆதனம் 1951-ம் ஆண்டின் 16-ம் இலக்கப் பிரிவிடுதற் கட்டளைச் சட்டத்திற்கமைய மேற்படி கோட்டில் மேற்படி இலக்கத்தின் ஓர் பிரிவிடுதல் வழக்கு தொடர்ந்திருக்கின்றதென்று இத்தாலுமக் கறிவிக்கப்பட்டிருக்கின்றது.

மேற்படி வழக்கில் எதிரிகள் மேற்படி கோட்டில் சமுகமளிக்கும்படி கட்டளைபண்ணப்பட்டிருந்து ஷெ தொடர்ச்சியை 1975-ம் ஆண்டு புரட்டாதி மீ 23-ம் திகதி (23-9-75) க்கு முன்னதாக பிரசுரம் செய்யும்படி கட்டளையிடப்பட்டிருக்கிறது.

கோட்டாரின் கட்டளைப்படி
க, கனகராசா, பதிவாளருக்காக.

1975-ம் ஆண்டு ஆடி மீ 30 உ 17 29-8

## பிரிவிடுதல் நொத்தீஸ்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்

கரணவாய் தெற்கு தூதாவளை 1, தம்பையா இராமச்சந்திரன்
2: பெண் தவமணிதேவி, —வழக்காளிகள்

இல, 12965 எதிராக

சுன்னாகம் 1. பொன்னையா கனகசபை 2, பெண் ஆனந்தமலர் கரணவாய் தெற்கு சந்திரோதயம் 3. விசுவலிங்கம் இராசேந்திரம் 4, பெண் சித்திரா லெட்சுமி எதிரிகள்.

வட மாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி உடுப்பிட்டிக் கோயிற்பற்று உடுப்பிட்டிக் குறிச்சிஇறை போதிரான் ஷெ உடுப்பிட்டி இமையாணன் குறிச்சியிறை கெவுளியன் தறை ஷெ கரணவாய் சோளங்ககுறிச்சியிறை வல்லியாவத்தை சாததாவத்தை நீ பர 90 குளி 9, 8/10 என்னும் ஆதனம் 1951-ம் ஆண்டின் 16-ம் இலககப் பிரிவிடுதற் கட்டளைச் சட்டத்திறகமைய மேற்படி கோட்டில் மேற்படி இலக்கத்தின் ஓர் பிரிவிடுதல் வழக்கு தொடர்ந்திருக்கின்றதென்று இத்தாலுமக்கறிவிக்கப்பட்டிருக்கின்றது.

மேற்படி வழக்கில் எதிரிகள் மேற்படி கோட்டில் சமுகமளிக்கும்படி கட்டளைபண்ணப்பட்டிருந்து ஷெ தொடர்ச்சியை 1975-ம் ஆண்டு புரட்டாசி மீ 25-ம் திகதி (25-9-75) க்கு முன்னதாக பிரசுரம் செய்யும்படி கட்டளையிடப்பட்டிருக்கிறது.

கோட்டாரின் கட்டளைப்படி
க. கனகராசா, பதிவாளருக்காக.

1975 ம் ஆண்டு ஆடி மீ 30 உ 16 29-8

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

வழ இல: M. B. 10394

யாழ்ப்பாணம் உரும்பிராய் வடக்கு கார்த்திகேசு தம்பு - வழக்காளி

எதிராக

உரும்பிராய் வடக்கு (1) பொன்னம்பலம் வில்லவராயன் ஆனைக்கோட்டை, உயரப்புலம் (2) பொன்னம்பலம் வயிரவநாதன் (3) பாலேந்திரா பரமேஸ்வரி (4) பரமநாதன் மகள் இராசேஸ்வரி —எதிராளிகள்

M. B. 10394 - ஆம் இலக்க வழக்கில் சம்பந்தப்பட்ட கீழ்க் காணும் ஆதனம் 1975-ஆம் ஆண்டு செப்ரெம்பர் (புரட்டாதி) மீ 23-ஆம திகதி [1975-09-23] செவ்வாய்க்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அவ்வாதனத்துள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத் தொகை; முதல் வட்டி ரூபா 7,670/- மேலும் இதில் 5,000/- ரூபாவுக்கு 23-10-68 தொடக்கம் 10-10-70 வரைக்கும் வருடமொன்றுக்கு 6 % வீத வட்டியும் அதன் பின் சேர்நத முழுத் தொகைக்கும இறுக்கும் வரைக்கும் வருடமொன்றுக்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 762-65 சதம். பவுண்டேச் மற்றும் விற்பனைககுரிய சலார்களும் இதில், ரூபா 147/- கழித்து மிகுதி, 1-7-75 அறிவித்தலின்படி மேலும் ரூபா 5000/- கழிதது மிகுதி.

### ஆதன விபரம்

வட மாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி கோப்பாய்க் கோவிற்பற்று உரும்பிராய் இறை ‘இலுப்பை நின்ற புலம்’ நிலப் பரபபு 12¼ பயிர்களும் அதைச் சேர்ந்தவைகளுடன சொரியலாய் அரைவாசிப் பங்கு. இதற்கு எல்லை கிழக்கு குலநாயகம் மனைவி சிவஞானத்தினுதனம்; வடக்கும் மேற்கும் ஒழுங்கை, தெற்கு பொன்னம்பலம் மனைவி தையலம்மாளினுதனம். பதிவு K. 208/259.

வி. செ. குட்டிப்பிள்ளை
கொமிஷனர் & விலைமதிப்பாளர்

“[illegible]கிரி”
643, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம். 16-8-75.

75, 29-8.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### THOUGHTS TO BE TREASURED

காலும் தலையும் அறியார் கலதிகள்.
கால் அந்தச் சத்தி அருள் என்பர், காரணம்
பாலொன்று ஞானமே பண்பார் தலை, உயிர்
கால் அந்த ஞானத்தைக் காட்டவீ டாமே,

The ignorant know not either the Foot or Head (of God). The Poot is Divine Love. The Head is Divine Wisdom, the source (of all creation. The soul attains emancipation when the Foot (Divine Grace) leads it to Divine Wisdom.

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாயவே ஞானமும் கல்வியும்
நமச்சிவாயவே நானறி விச்சையும்
நமச்சிவாயவே நாநவின் றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே.

திருச்சிற்றம்பலம்

Hindu Organ

FRIDAY, AUGUST 29, 1975

## Heritage in Historical Records

It is true that the devotees of the Saiva Faith have a glorious heritage and rich tradition in the prolific pages of Saiva Literature. It is also a known fact that the extant literature is but a portion of the vast pronouncements of the long line of saints and sages of ancient times. However, the absence of authoritative chronicles of the biographies of all those literators who had from time to time embellished our literature makes it difficult for students of research to trace a continuity of the context of spiritual revelations in the form of historical records.

The History of Saiva Literature would be a voluminous presentation of the lives and works of saints, sages and scholars. The biographical records of the contribution of the Great Navalar to our literature answer to some degree the requirements of students of research. But there are other scholars whose writings require to be biographically recorded. Shri S. Shivapadasundarampillai, the author of the Saiva Potham series, and Thiruvarudpayan, Mudaliyar S. Sabaratnam (Essentials of Hinduism), Shri A. Visuvanathan (Elements of Saiva Siddantham). Bhrama Sri Kasibasi Senthil Natha Iyer the Pulavars and Pundits Kumarasamy of Chunnakam, Kumarasamy of Puloly, Sivasambu of Udupiddy, Sangarapandithar of Neervely, Somasundarapulavar of Navaly, to mention a few are names that frequently occur in the exposition of the principles and practice of Saivaism. Full biographies of these eminent Saiva leaders would be a useful contribution.

In this connection our readers will do well to refer to the review of the life and writings of Sir Muttu Cumarasamy that appears elsewhere in this edition. The author of this volume, Mr. S. Durai Raja Singham of Singapore has unremittingly devoted himself to the arduous hobby of delving into the pages of recorded notes of the achievements of our leaders of the past and had compiled in a convincing manner the continuing story of those great men. This is a remarkable example to be followed to preserve our heritage in historical records.

## DANCE OF SHIVA

(Dr. Ananda K Coomaraswamy)

(Continued from last issue)

Then Ati-Sheshan wor-worshipped Shiva, and prayed above all things for the boon, once more to behold this mystic dance; Shiva premised that he should behold the dance again in sacred Tillai, the centre of the Universe.

This dance of Siva in Chidambaram or Tillai forms the motif of the South Indian copper images of Shri Nataraja, the Lord of the Dance These images vary amongst themselves in minor details, but all express one fundamental conception. Before proceeding to enquire what these may be, it will be necessary to describe the image of Shri Nataraja as typically represented The images, then, represent Shiva dancing, having four hands with braided and jewelled hair of which the lower locks are whirling in the dance In His hair may be seen a wreathing cobra, a skull, and the mermaid figure of Ganga; upon it rests the crescent moon, and it is crowned with a wreath of Cassia leaves. In His right ear He wears a man's earring, a woman's in the left; He is adorned with necklaces and and armlets, a jewelled belt, anklets, bracelets, finger and toe-rings. The chief part of His dress consists of tightly fitting breeches, and he wears also a fluttering scarf and a sacred thread. One right hand holds a drum the other is uplited in the sign of do not fear; one left hand holds fire, the other points down upon the demon Muyalaka, a dwarf holding a cobra; the left foot is raised There is a lotus pedestal, from which springs an encircling glory (tiruvasi), fringed with flame, and touched within by the hands holding drum and fire. The images are of all sizes, rarely if ever exceeding four feet in total height.

(To be continued)

## Kanda Purana Recital at Navalar Sabhai Nallur

The Kandapurana Recital which commenced about five months back at the above Sabhai building and the recital done by great reciters from all parts of Jaffna comes to the end in about a week with Apishekam (அபிடேகம்) at Kandan Temple.

The regular audience of the Purana Padanam must have undoubtedly gained great benefit; the organisers deserve praise.

### Review of Reeent Publications

## The Life and Writings of Sir Muttu Coomaraswamy

By S. DURAI RAJA SINGAM

Commemorating leaders of the past whose distinguished achievements for the mother-land were among the influencing circumstances that led to the winning of freedom for Lanka is, in other words, an appeal to the present and future generations to preserve and maintain the precious heritage of cultural educational and religious progress of preceding eras

This valuable compendium has been designed and executed by the author in a spirit of devotion to the course of history with a feeling of admiration and reverence for the architects of the advancement of our Island home.

Every available source of information has been put to proper advantage by our capable author whose indefatigable efforts are an object lesson to ambitious biographers and students of research.

Mr. Durai Raja Singam from his days at school has been deeply interested in the lives and works of the literators and legislators of the past. His enthusiasm for recording notes of rare achievements of the distinguished sons of his mother-land has been maintained all throughout his life. And the result is the publication of this prodigious edition presenting in the original form the conspicuous attainments of the first of the long line of distinguished Ceylonese in the context of the history of our lovely little Isle. The foreword by Dr. Rama Ponnambalam Coomarasamy son of the distinguished Dr. Ananda K. Coomarasamy and the introduction by Dr. S F.C Ludowyk comprehensively describe the worth of this useful publication.

Here is a collection of historical facts that must necessarily attract the attention of educational establishments and cultural centres. The present generation of students will find in this attractive publication something of lasting value that will help them know the great past in the proper perspective.

The author's intimation that the life and works of Dr. Ananda K. Coomarasamy who by his deep scholarship and valuable research had lived "to preserve and protect the national ideals and Eastern traditions would be forthcoming is in itself a reassurance of his religious devotion to the cause of our commendable history.

## Reception to Attorney General

### Shri Siva Pasupathy Feted

Organized by the Kurumpasiddy Sanmarga Sabhai a reception was accorded to Shri Siva Pasupathy, Attorney General, on Wednesday August 27, at the Sanmarga Sabhai Hall. A large gathering comprising of Judges, Lawyers, Doctors, Principals, Teachers and leading men and women of Jaffna was present.

Kalaipperarasu A. T. Ponnudurai presided over the function. A welcome address in poems composed by Kavignar V. Kandavanam was presented after Mr. T. Rajaratnam, Secretary of the Sabhai, welcomed the guest and the speakers.

Mr. S. R. Kanaganayakam, Mr. M. D. Jesuratnam, District Judge Mallakam, Mr. T. T. Jeyaratnam Retired Principal and Mr. R N. Sivapirakasam paid glowing tributes to Shri Siva Pasupati and wished him further elevation in the judiciary.

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்

rinted and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Saiva Prakasa Press 450 K. K. S. Road Vannarpannai, Jaffna on Friday August 29, 1975.

Editor-in-Chief R. N. Sivapirakasam

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org